

எங்கள் குரல் S.G.சாந்தனின்

பாடல் தொகுப்பு









Bhairavi Music Academy

பைரவி நுண்கலைக்கூடம்


I CAN FIND THE BEST MORTGAGE FOR YOUR HOME!
UTHA JEYANANDAN
CALL TODAY 416.953.1473
mortgageguardian.ca
utha@rogers.com
LIC: M16001013
MORTGAGE ALLIANCE
LET US BE YOUR GUARDIANS

எங்கள் குரல் S.G.சாந்தனுக்காக
பைரவி நுண்கலைகூடம்
வழங்கும்

வலிதாங்குவோம்

OCTOBER 30TH 2016 @ 5:00 PM

METROPOLITAN CENTRE
3840 FINCH AVE E , TORONTO, ON M1T 3T4

வெளியீடு
பைரவி நுண்கலைக்கூடம்
416.283.9598 | 647.206.7886

எங்கள் குரல் S.G. சாந்தனின் இசைப்பயணம்

விடுதலைப் போரின் நியாயத்தை, எம் உரிமையை இழப்பின் வலியை மாவீரர் தியாகத்தை கணீரென்ற தன் குரலால் பாட்டாய் வடித்தவர் S.G. சாந்தன் அவர்கள். இவரின் இயற்பெயர் குணரெட்னம் சாந்தலிங்கம், அனைவராலும் S.G. சாந்தன் என அறியப்பட்டவர். இவர் 1960 ஆண்டு மார்கழி மாதம் 20 ஆம் திகதி புங்குடுதீவு யாழ்ப்பாணத்தில் பிறந்தார்.

தந்தையின் தொழில், வியாபாரம் என்பதால் இவர்கள் கொழும்பிற்கு இடம்பெயர்ந்து அங்கே தனது படிப்பை தொடர்ந்தார். 1972 ஆண்டு காலப்பகுதியில் Redio Cyelon வானொலியில் ஒலிபரப்பாகிய மழலைச் செல்வம் மற்றும் சிறுவர் மலர் போன்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டு பக்தி பாடல்களை பாடியுள்ளார்.

கொழும்பில் 1973ஆம் ஆண்டில் முன்னணியில் இருந்த சித்திராலயா இசைக்குழுவில் பொறுப்பாளராகிய திரு. செல்லத்துரை அவர்களின் உதவியுடன் இசைக்குழுவில் பக்திபாடல்களையும் நாளடைவில் இந்திய சினிமா பாடல்களையும் பாடியுள்ளார்.
1978 ஆம் ஆண்டு காலகட்டத்தில் அவரின் தந்தை, வியாபாரத்தை கிளிநொச்சிக்கு மாற்றிக்கொண்ட சமயம், சாந்தன் அவர்கள் 18 வயதே அடங்கிய இளைஞனாக இருக்கும் போது கிளிநொச்சியில் பாடல்களை பாடி மிகவும் பிரபலமானார்.

1991ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளால் வெளியிடப்பட்ட இந்த மண் எங்களின் சொந்தமண் என்ற இசைத்தட்டில் இவர் சியாமளா என்னும் பாடகியுடன் இணைந்து "பூ மலர்ந்தது கொடியினில் புலி பிறந்தது மடியினில்" என்ற பாடல் முதன் முதலில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. அதே இசைத்தட்டில் இந்த மண் எங்களின் சொந்த மண், விண்வரும் மேகங்கள் பாடும், குயிலே பாடு அத்தோடு எதிரிகளின் பாசறையை தேடிப்போகிறோம் போன்ற மிகவும் பிரபலமான பாடல்களை பாடியுள்ளார்.

இவருடைய இசைப்பயணத்தில் விடுதலைக்கு உரமூட்டிய பாடல்கள் என்று பார்க்கும் போது 250க்கு மேற்பட்ட பாடல்களை தனது கணீர் என்ற குரலால் பாடி மக்கள் மனங்களில் தனக்கென்று முத்திரையை பதித்துள்ளார் என்றால் மிகையாகாது. இவரின் இசைப்பயணத்தை கௌரவிக்கும் முகமாக தேசிய தலைமையிடம் இருந்து எண்ணிலடங்காத விருதுகளைப் பெற்றுள்ளார்.

தமிழீழ கலைப்பண்பாட்டுக் கழகத்தினால், ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட தமிழீழ கவிஞர்களின் வரிகளில் ஈழத்தின் தலைசிறந்த கோவில்களின் சிறப்பு பற்றி, 350க்கும் மேற்பட்ட பக்திப்பாடல்களை பாடியுள்ளார்கள். இவருக்கு கோயில்கள், அமைப்புக்கள் போன்றவை மெல்லிசை மன்னன், மெல்லிசை சக்கரவர்த்தி போன்ற பட்டங்களை வழங்கியுள்ளனர். விடுதலை பாடல்களைப் பொறுத்தவரை கவிஞர். புதுவை இரத்தினதுரை, கு.வீரா, வேலணையூர் சுரேஷ், த.வே.பஞ்சாச்சரம் போன்றவர்களின் வரிகளில் பாடிய பாடல்கள் எண்ணிலடங்காதவை. இவரின் இசைப்பயணம் மென்மேலும் தொடர நாமும் வாழ்த்துவோம்.

பண்பாட்டுக் இசைவாக

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை **இசை :**
பாடியவர் : S.G சாந்தன் **இசைத்தட்டு : பரணிபாடுவோம்**

பண்பாட்டுக் இசைவாகப் பண்பாடு
தமிழிசை பண்பாடு தமிழன்
வரலாற்று வரிகளையே நீபாடு
வீர வரலாற்று வரிகளையே நீபாடு (2)

ஈகை இறக்க முதல் வீரம் விருந்தோம்பல்
பண்பாடு இது எம் பண்பாடு
ஒழுக்கம் பொதுவுடமை வலிவு துணிவு எல்லாம்
பண்பாடு தமிழன் பண்பாடு
அறிஞர் வியந்துபட உலகம் போற்றி நிற்கும்
பண்பாடு இது எம் பண்பாடு (2)

வந்தோரை வரவேற்கும் பண்பாடு
தமிழன் பண்பாடு தமிழன்
வரலாற்றில் பண்பட்ட தனிஏடு
தமிழன் தனிஏடு
பண்டை தமிழர்களின் செயற்பாடு
இந்த செயற்பாடு
பண்பட்ட பழந்தமிழர் பண்பாடு
நல்ல பண்பாடு

பெற்றோரைப் போற்றி கற்றோரை காமுறுதல்
பண்பாடு எம் பண்பாடு (2)
தமிழன் வரலாற்றில் வழிவந்த
பண்பாடு எமது பண்பாடு (2)

தாயை தமிழ் மொழியை நாட்டைப் பழித்தவனைப் பழிவாங்கி
மண்ணைக் கைப்படுத்த அறிவை பாழ்படுத்த
வந்தவனை உயிர்வாங்கி களத்தில் வாகைசூடிய எம் வரலாறு
தமிழர் பெருமைமிகு போரேடு

பண்டைய பண்பாட்டை
வீரமிகு வரலாற்றை
வீரம் விளைந்து நிற்கும் வேங்கைகளின் வரலாற்றை
வீறுகொண்டே எழுந்து நீ பாடு (3)

பிட்டுக்கு மண்சுமந்த பெருமானார்

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை **இசை :**

பாடியவர் : S.G சாந்தன் **இசைத்தட்டு : பரணிபாடுவோம்**

பிட்டுக்கு மண்சுமந்த பெருமானார் இந்த கொக்கட்டிச் சோலையிலே உருவானார்
திக்கெட்டும் அருளாட்சி புரிகின்றவர் தான்தோன்றி ஈஸ்வரராய் தெரிகின்றவர்

பிட்டுக்கு மண்சுமந்த பெருமானார் இந்த கொக்கட்டிச் சோலையிலே உருவானார்(2)
திக்கெட்டும் அருளாட்சி புரிகின்றவர் திக்கெட்டும் அருளாட்சி புரிகின்றவர்
தான் தோன்றி ஈஸ்வரராய் தெரிகின்றவர் தான் தோன்றி ஈஸ்வரராய் தெரிகின்றவர்
பிட்டுக்கு மண்சுமந்த பெருமானார் இந்த கொக்கட்டிச் சோலையிலே உருவானார்(2)

திருவடிவம் அருள் தருவடிவம் சிவவடிவம் தொழு வினைமுடியும்
உருவடிவம் படி முடிவடிவம் சிவவடிவம் தொழு வினைமுடியும்
பிட்டுக்கு மண்சுமந்த பெருமானார் இந்த கொக்கட்டிச் சோலையிலே உருவானார்(2)

தானாக உருவாகி இங்கெழுந்தாய் இந்த தமிழூரில் வந்தன்று நீ அமர்ந்தாய்(2)
தேனாலும் பாலாலும் சீராட்டுறோம் (2)
உன்திருவாசல் வந்துந்தன் தேரோட்டுறோம் (2)
பிட்டுக்கு மண்சுமந்த பெருமானார் இந்த கொக்கட்டிச் சோலையிலே உருவானார்(2)

நீ அமர்ந்து இருக்கின்ற ஊரினிலே வந்து தீ எரிகின்றதையா வேரினிலே(2)
தாயவள் இருக்கின்றாள் அருகினிலே (2)
ஏன் சா வருகின்றதையா தெருவினிலே (2)
பிட்டுக்கு மண்சுமந்த பெருமானார் இந்த கொக்கட்டிச் சோலையிலே உருவானார்(2)

பன்றிகரு பால்கொடுத்த பரமசிவன் நீ
பாவைக்கும் உயிர் கொடுத்த பெரிய சிவன்(2)
இன்றைக்கும் எமக்காக எழுவாய் ஐயா (2)
எங்கள் இடர்கண்டு உடன் வந்து அருள்வாய் ஐயா (2)
பிட்டுக்கு மண்சுமந்த பெருமானார் இந்த கொக்கட்டிச் சோலையிலே உருவானார்
திக்கெட்டும் அருளாட்சி புரிகின்றவர் தான்தோன்றி ஈஸ்வரராய் தெரிகின்றவர்
பிட்டுக்கு மண்சுமந்த பெருமானார் இந்த கொக்கட்டிச் சோலையிலே உருவானார்

ஆதியாய் அனாதியாய்

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை   இசை :
பாடியவர் : S.G சாந்தன்   இசைத்தட்டு : பரணிபாடுவோம்

ஆதியாய் அனாதியாய் அவதரித்த செந்தமிழ் (2)
அன்புக்கு விளககேற்றி அறம் காத்ததெங்கள் தமிழ் (2)
ஆதியாய் அனாதியாய் அவதரித்த செந்தமிழ்

மேதினியில் வீரமதால் மேன்மை கொண்டதெங்கள் தமிழ் (2)
மேலான தத்துவத்தின் பொருள் சொன்னஞானத் தமிழ் (2)
(ஆதியாய் அனாதியாய்.......)

திசையெட்டும் ஒலிகொட்டி புகழிட்டு உரமிட்ட செந்தமிழ் எங்கள் தமிழ்
திடமுள்ள நெஞ்சங்கள் குடமிட்டு வாழ்ந்திட்ட வேங்கையின் வீரத்தமிழ்
படைகொண்டு வந்தவர் பகைவென்று விளையாடும் பைந்தமிழ் நம் செந்தமிழ்
பாவலர் நாவலர் காவலர் வீரமதை பாடி புகழ்ந்திட்ட பைந்தமிழ்

குறுகத்தறித்த குறளால் உலகம் தெளிய தளைத்த செந்தமிழ்
குமரி முதலாக இமையம் வரையாக முடி கொண்டு வாழ்ந்த முத்தமிழ்
அடிமையாவதோ பகைவன் பிடியில் மாழ்வதோ
தமிழா ஆண்மை இல்லையோ உரிமையில் ஆசையில்லையோ

தூக்குங்கள் துப்பாக்கி துணிந்துவிட்டால் எவன்பாக்கி
தாக்குங்கள் தீமைகளை தகர்த்திடுங்கள் எதிரிகளை
போக்குங்கள் பயந்தனை புறப்படுங்கள் போர்க்களம் (2)
ஆக்குங்கள் தமிழீழம் அனுபவிப்போம் சுதந்திரம் (2)
(அனுபவிப்போம் சுதந்திரம்....)

ஆனையிறவுக்கு சேலைகள் கட்டி

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை
இசை : இசைவாணர் கண்ணன்
பாடியவர் : S.G, சாந்தன், திருமலைச்சந்திரன்
இசைத்தட்டு : ஆனையிறவு

பல்லவி

ஆனையிறவுக்கு சேலைகள் கட்டி ஆனந்தம் பாடுங்கடி
ஆவாரம் பூவிலே பூவாரம் கட்டி
பூபாளம் பாடுங்கடி – இது
விடியலான நேரம் – இனி
விழியிலில்லை ஈரம் – எம்
கொடியின் வீர வாசம் – தமிழ்
குலத்தின் வேரில் வீசும்

சரணம்

இருண்ட வானம் மீதில் விடி
விளக்கையேற்றினான்
ஈழத்தமிழர் வாழ்வில் வெல்லும்
வழியைக் காட்டினான்
வரண்டு போன வயலில் நீர்
நதியைப் பாய்ச்சினான்
ஆனையிறவைப் பிடித்து பரணிபாடும்
தலைவன் ஆகினான்
    தலைவன் எங்கள் தலைவன் – தமிழ்
    இனத்தின் பெரிய தலைவன்

அடிமை வாழ்வு முடியும் என்று
அடித்துக் கூறினான்
தமிழர் தேசம் விடியுமென்று
தலைமை தாங்கினான்
கொடிய பகையும் சரியுமென்று
படைகள் கூட்டினான்
ஆனையிறவைப் பிடித்து பரணி பாடும்
தலைவன் ஆகினான்
    தலைவன் எங்கள் தலைவன் – தமிழ்
    இனத்தின் பெரிய தலைவன்

கிழக்கு வானம் சிவக்கும்

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை **இசை :**

பாடியவர் : S.G சாந்தன் **இசைத்தட்டு : பூநகரி நாயகர்கள்**

பல்லவி

கிழக்கு வானம் சிவக்கும் நேரம்
கிளிகள் பாடிப் பறக்கும் நேரம்
நிலத்தில் வீரம் பிறக்கும் ஈழம்
நிமிர்ந்து தமிழர் நடக்கும் காலம்

அனுபல்லவி

காலை விடிகின்றது – தமிழ்
ஈழம் மலர்கின்றது
(கிழக்கு வானம் சிவக்கும்......)

தாய்நிலத்தில் ஏறிவந்து பேய்கள் குடியிருந்தன
ஈவிரக்கம் ஏதுமின்றி இங்குரத்தம் குடித்தன
நேற்றெமது புலிகள் பாய்ந்தனர்
நின்ற பகை படைகள் சாய்ந்தன
(காலை விடிகின்றது........)
(கிழக்கு வானம் சிவக்கும்......)

பூநகரி எதிரிவீடு வேங்கையிடம் விழுந்தது
போர்மறவர் புகுந்தபோது பேச்சிழந்துபோனது
நாகதேவன் துறையும் பணிந்தது
ஞானிமடத் தளமும் குனிந்தது
(காலை விடிகின்றது........)
(கிழக்கு வானம் சிவக்கும்......)

சிங்களத்துப் பாசறைகள் இங்கெமது காலில் விழும்
தேசமெங்கும் வேங்கைகளின் வீரம் விளையாடிவரும்
அச்சமென்பது இங்கு இல்லையே
அண்ணன்படை தோற்பதில்லையே

(காலை விடிகின்றது........)
(கிழக்கு வானம் சிவக்கும்......)

குயிலேபாடு குயிலேபாடு

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை
பாடியவர் : S.G சாந்தன்
இசை :
இசைத்தட்டு : இந்த மண் எங்களின் சொந்த மண்

குயிலேபாடு குயிலேபாடு
காலை விடிந்ததென்று
குயிலேபாடு – எங்கள்
கவலை முடிந்ததென்று குயிலேபாடு
சோலை மலர்ந்தது சுகந்தம் எழுந்தது
துணிவுடன் வேங்கைகள் அணியொன்று பிறந்தது
(குயிலேபாடு.....)

குண்டு பொழிந்தது வானம் – கடல்
குருதி போலவே ஆகும்
தங்கத்தமிழர்கள் சாவின் மடியினில்
இங்கு மடிந்தனர் நேற்று – இப்போ
எங்கள் திசையினில் காற்று – புலி
எழுந்து வந்ததைக் காட்டு – இனி
எதிரி வாசலில் பூட்டு
(குயிலேபாடு.....)

எங்கள் தலைவனின் மூச்சு – தமிழ்
ஈழமென்பதாய் ஆச்சு
பொங்கி எழுந்தவன் போரில் குதித்தபின்
புலிகளாயினர் தமிழர் – இதில்
பொசுங்கிப் போயினர் பகைவர் – இனி
எங்கும் எழும்புவர் புலிகள் – விழும்
எதிரிப்படைகளின் தலைகள்
(குயிலேபாடு.....)

கழுத்தில் ஆடுது நஞ்சு – போர்க்
களத்தில் ஆடுது நெஞ்சு
விழுத்த முடியுமா வேங்கை வீரரை
விழுந்தும் எழும்புவர் புலிகள் – பகை
விரட்டி எடுப்பரே பலிகள் – இனிப்
பழுத்து விழுந்திடும் கனிகள் – புதுப்
பரணி எழுதுவர் கவிகள்
(குயிலேபாடு.....)

கடலதை நாங்கள் வெல்லுவோம

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை

பாடியவர் : S.G சாந்தன் இசைத்தட்டு : நெய்தல்

கடலதை நாங்கள் வெல்லுவோம் இனி
கடற்புலி நாங்கள் ஆழுவோம் (2)
கடாரம் வென்ற சோழனவன்
கப்பலில் சென்ற கடலிதுதான் (2)
பாரதம் வென்ற புலிப்படையின்
படகது சென்றிடும் கடலிதுதான்(2)
(கடலதை நாங்கள்......)

கடல்புலி கரும்புலி உயிர்ப்பிலே
கடலே எரிந்தது நெருப்பிலே (2)
கொடும் சிங்களப் படகுகள் அழிந்தது
சிறப்புடன் கடல்படை பிறந்தது (2)
(பாரதம் வென்ற.... 2)
(கடலதை நாங்கள்.....2)

சங்கத தமிழது மூழ்கிய
கடலினில் தோழர்கள் மூழ்கினர் (2)
மீண்டும் சங்கத்தமிழுடன் எழுந்தனர்
பரணியில் புதுக்கதை எழுதினர் (2)
(பாரதம் வென்ற.... 2)
(கடலதை நாங்கள்.....2)

யாதும் ஊரே யாவரும் கேளீர்
என்றான் சங்கத் தமிழனவன் (2)
தமிழ்படை வீரம் கேளாய் உலகே
என்றவன் ஈழத்தமிழனவன் (2)
(பாரதம் வென்ற.... 2)
(கடலதை நாங்கள்.....2)

அன்னை தேசமே

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை இசை : இசைப்பிரியன்
பாடியவர் : S.G சாந்தன் இசைத்தட்டு : மண்ணுறங்கும் மாவீரம்

அன்னை தேசமே அன்னை தேசமே உன்னைப்பாட மறப்பாரா
அன்னை தேசமே அன்னை தேசமே
ஆழும் தமிழர் காலம் வரையில் ஓய்வாய் யாரும் இருப்பாரா
அன்னை தேசமே அன்னை தேசமே
(அன்னை தேசமே.....)

உன்னை மீட்க எந்த விலையும் கொடுக்கும் எங்கள் தமிழினம்
உனக்காய் தானே எங்கள் உயிரும் கொடுப்போம் இனியும் தினம்தினம்
அன்னை தேசமே அன்னை தேசமே
(அன்னை தேசமே.....)

மாவீரர்கள் நெஞ்சில் நீயே தாயம்மா
நீயே தாயம்மா
வீரர்களின் போரில் தீயாய் நீயம்மா
தீயாய் நீயம்மா
உனக்காகவே எந்த வலியும் சுமப்போம்
உனைமீட்கவே ஒரு சபதம் எடுப்போம் (2)
தாய் நாடே நீதானே எம் தமிழர் பெருவாழ்வே – அட
உன்னைத் தானே உம்மைத்தானே உயிராய் நினைக்கின்றோம்
(அன்னை தேசமே.....)

சாதனைகள் செய்யும் ஈழப்போரம்மா
ஈழப்போரம்மா
சாவை வென்ற வீரம் வாழும் ஊரம்மா
வாழும் ஊரம்மா
தமிழீழமே எங்கள் தீர்வாய் இருக்கும்
ஒருநாளுமே அது மாறாதிருக்கும் (2)
சூழியெங்கும் வாழ்கின்ற எம்வீரர்
உயிர்மீது தமிழ்தாயே தமிழ்தாயே
நாம் சத்தியம் செய்கின்றோம்
(அன்னை தேசமே.....)

விண்வரும் மேகங்கள்

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை
பாடியவர் : S.G சாந்தன்

இசை : இசைவாணர் கண்ணன்
இசைத்தட்டு : இந்த மண் எங்களின் சொந்த மண்

விண்வரும் மேகங்கள் பாடும் – மா
வீரரின் நாமங்கள் கூறும்
கண்வழி கங்கைகள் பாயும் – இவர்
காவிய நாயகர் ஆகும்
புதைந்த குழியில் இருந்து நீங்கள்
எழுந்து வாருங்கள்
எரிந்த இடத்தில் இருந்து நீங்கள்
நிமிர்ந்து வாருங்கள்
(புதைந்த குழியில்)

வேங்கைகளாகி விடிவுகள் தேடி
விழுந்த வீரர்களே – தமிழ்
வீடுகள் யாவிலும் விளக்குகளாகி
எரியும் சுடர்களே
இளமைக்கால இனிமைகள் யாவும்
துறந்த வேங்கைகளே – தமிழ்
இனத்துக்காக இறந்து தீயில்
எரிந்த வீரர்களே
எழுந்து வாருங்கள் நிமிர்ந்து வாருங்கள்
எழுந்து வாருங்கள் – நீங்கள்
நிமிர்ந்து வாருங்கள்
தமிழீழம் மலரும் நேரம் இதுதான்
புரிந்து வாருங்கள்
(விண்வரும் மேகங்கள்.....)

எதிரிகள் வாழி வீடுகள் ஏறி
நடந்த வேங்கைகளே - உயிர்
இழந்தபோது உணர்வுகளோடு
மடிந்த வீரர்களே
காற்றும் நிலவும் பூக்கும் மலரும்
உங்கள் பெயர் சொல்லும் - இனி
காலம் யாவும் நீழும் போதும்
உங்கள் பெயர் வெல்லும்
எழுந்து வாருங்கள் - நீங்கள்
நிமிர்ந்து வாருங்கள் - தமிழ்
ஈழம்மலரும் நேரம் இதுதான்
புரிந்து வாருங்கள்
(விண்வரும் மேகங்கள.....)

உங்கள் கனவே எங்கள் நினைவாய்
எழுந்து நிற்கின்றோம் - உடல்
ஓடும் குருதி யாவும் சொரியும்
நிலத்தில் நிற்கின்றோம்
தலைவன் வழியில் புலிகள் அணியாய்
நடந்து செல்கின்றோம் - வரும்
தடைகள் யாவும் உடையும் உடையும்
நிமிர்ந்து கொள்கின்றோம்
எழுந்து வாருங்கள்......
(விண்வரும் மேகங்கள.....)

எம்மை நினைத்து யாரும்

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை

பாடியவர் : S.G சாந்தன் **இசைத்தட்டு : கரும்புலிகள்**

பார்வதி சிவபாதம்

வசனம்

காற்றாகி வந்தோம் கடலாகி வந்தோம்
காதோரம் ஒருசேதி சொல்வோம் – கரும்
புலியாகி நின்றோம் புயலாகி வென்றோம்
புரியாத புதிராகிச் சென்றோம்

பல்லவி

எம்மை நினைத்து யாரும் கலங்கக்கூடாது – இனி
இங்கே மலரும் சின்னப் பூக்கள் வாடாது
கண்ணில் வழியும் நீரைத் துடைத்து வாருங்கள் – எங்கள்
காவிய நாயகன் பாதையிலே அணிசேருங்கள்.

(எம்மை நினைத்து.....)

சரணம்

வாழும் போதில் மானத்தோடு
வாழ்பவன் தானே தமிழன் – தன்
வாசலில் அடிமைச் சேவகம் செய்து
வாழ்பவன் என்ன மனிதன்
வழியில் இடறும் பகைகள் எரிய
வருக வருக தமிழா – உன்
விழியில் வழியும் நீரைத் துடைத்து
வெளியில் வருக தமிழா

(எம்மை நினைத்து.....)

காற்றும் நிலவும் யாருக் கெனிலும்
கைகள் காட்டுவதில்லை – நாங்கள்
போகும் திசையில் சாகும் வரையில்
புலிகள் பணிவதும் இல்லை
மீண்டும் மீண்டும் புதிதாய் நாங்கள்
முளைப்போம் இந்த மண்ணில் – எங்கள்
மூச்சும் இந்தக் காற்றில் கலந்து
மூட்டும் தீயைக் கண்ணில்.

(எம்மை நினைத்து.....)

சங்கு முழங்கடா தமிழா

பாடலாசிரியர் : **புதுவை இரத்தினதுரை**

பாடியவர் : **S.G சாந்தன்** **இசைத்தட்டு** : **பூநகரி நாயகர்கள்**

மணிமொழி

பல்லவி

சங்கு முழங்கடா தமிழா – இந்தச்
சாதனை பாடடா கவிஞா
பொங்கும் புலிகளின் போர்த்திறன் பாடியே
பூநகர் வெற்றியை வாழ்த்துங்கடா
(சங்கு முழங்கடா.....)

சரணம்

நாகதேவன்துறை வேகப் படகுகள்
நம்கையில் வந்ததடா – பகை
ஏவிய பீரங்கி யாவுமே – எங்களின்
காலிற் கிடக்குதடா – அட
பாயும் புலிகளின் கையில் எதிரியின்
பாசறை வீழ்ந்ததடா – காற்றில்
பஞ்சு பறந்தது போலப்பறந்தது
வந்த படைகளடா.
(சங்கு முழங்கடா.....)

சிங்களம் இங்கினிப் பொங்குமா? – வந்தினி
செந்தமிழ் ஈழத்தில் தங்குமா? – இனிக்
கங்குல் எமை இங்கு போர்க்குமா? – கரி
காலனின் சேனைகள் தோற்குமா? புது
விந்தைகள் ஆயிரம் சேர்த்ததடா – புலி
வீரத்தின் வேரினில் பூத்ததடா – எங்கள்
பொங்கிடும் பூமியைப் பாடுவோம் – பிர
பாகரன் காலம் என்றாடுவோம்.
(சங்கு முழங்கடா.....)

வெள்ளி நிலா விளக்கேற்றும்

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை
பாடியவர் : S.G சாந்தன் இசைதட்டு : நெய்தல்

வெள்ளி நிலா விளக்கேற்றும் நேரம் - கடல்
வீசுகின்ற காற்றின் உப்பின் ஈரம் (2)
தள்ளிவலை ஏற்றி வள்ளம் போகும் - மீன்
அள்ளிவர நீண்ட நேரம் ஆகும் (2)

எங்கள் துயர் தெரியாது என்னவென்று புரியாது
இங்கிருந்து பாடுகின்ற எங்கள் குரல் கேட்காது (2)
(தள்ளிவலை ஏற்றி.........) (2)
(வெள்ளி நிலா..........)

ஊருறங்கும் சாமத்திலே யாருமற்ற நேரத்திலே
கார் இருட்டில் படகெடுத்து போவோம் - நேவி
கண்டுவிட்டால் கடலில் நாங்கள் சாவோம்
பேருமின்றி ஊருமின்றி பெற்றவளின் முத்தமின்றி
ஈரவுடல் கரை ஒதுங்கும் காலை - புலி
இந்த நிலை மாற்றிடுவான் நாளை
(தள்ளிவலை ஏற்றி.........) (2)
(வெள்ளி நிலா..........)

பாயிறக்கி கரையினிலே பாதம்படும் வரையினிலே

பார்த்த விழி பூத்திருப்பாள் மனைவி – என்னை

பார்த்த பின்னே சோற்றை உண்பாள் துணைவி

வாயிறுக்கி வயிறிறுக்கி வாழும்கடல் மீனவரின்

வாசல் எங்கும் வேதனையின் கோடு – நாளை

வந்து விடும் எங்கள் திருநாடு

(தள்ளிவலை ஏற்றி.........) (2)

(வெள்ளி நிலா..........)

அப்பன்வலை வீசிவீசி அள்ளிவந்த செல்வமெல்லாம்
அன்னியனின் காலில் சென்றுவிழுமோ – புலி
ஆழுகின்ற காலம் நாளை வருமோ
தக்கதொரு தலைவனுண்டு தளபதிகள் வீரருண்டு
தங்கத்தமிழ் ஈழம் வரும் நாளை – அலை
தாவிக்கடல் புலிகள் வெல்லும் வேளை
(தள்ளிவலை ஏற்றி.........) (2)
(வெள்ளி நிலா..........) (2)
(தள்ளிவலை ஏற்றி.........) (2)
மீன் அள்ளிவர நீண்ட நேரம் ஆகும் (5)

கரும்புலிகள் எனநாங்கள்

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை　　இசை :
பாடியவர் : S.G சாந்தன்　　இசைத்தட்டு : பரணி பாடுவேம்

கரும்புலிகள் எனநாங்கள் மகிழ்வோடுசெல்வோம்
கண்டதும் சிங்களம் கலங்கிடும் வெல்வோம் (2)
கடலினில் சிங்களபடகினைஉடைப்போம்
தரையில் எதிரியின் பாசறைமுடிப்போம்
கரும்புலிகள் எனநாங்கள் மகிழ்வோடுசெல்வோம்
கண்டதும் சிங்களம் கலங்கிடும் செல்வோம்
அம்மாவும் அப்பாவும் எங்களுக்குண்டுஆனாலும் மண்மீதுபெரும்பாசம் உண்டு
ஆறடிமண்கூட எமக்காககேளோம்
தமிழ்த்தாயின் துயர் தீர்க்கமகிழ்வோடுசாவோம்
கரும்புலிகள் எனநாங்கள்...................

சாவினைதோள்மீதுநாங்கள் சுமப்போம்
சாவுக்கும் அஞ்சாமல் சாவுக்குள் வாழ்வோம்
தமிழனின் சாவுகள் வரலாறுபடைக்கும்
தமிழீழதாயவள் விலங்குகள் உடைக்கும்
கரும்புலிகள் எனநாங்கள்...................

ஊரதில் வெடியோசைவான்வரைகேட்கும்
உலகத்தின் திசையெங்கும் எம் சேதிதாக்கும்
காற்றாகிஎம் உடல் நீராகிகரையும்
தமிழர் தம் உணர்வோடுஎம் உயிர் கலங்கும்
கரும்புலிகள் எனநாங்கள்...................

Krishna Punniyam
Mortgage Agent
Licence # M08008952



R M A
REAL MORTGAGE ASSOCIATES
Licence #10464

Office: 647-344-6600
Fax: 647-344-6601
Direct: **416-710-9150**
Email: kpunniyam@rmabroker.ca
Web: www.rmabroker.ca

4158 Kingston Road, Unit 3. Scarborough, ON M1E 2M4

கோபுரதீபம் நீங்கள்

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை
இசை : இசைப்பிரியன்
பாடியவர் : S.G சாந்தன்
இசைத்தட்டு : தணல்

கோபுரதீபம் நீங்கள் கோயினில் தெய்வம் நீங்கள்
வாழ்வினில் எம்மைகாத்த மாவீரரே
சாவுதான் முடிவும் இல்லை சாதிக்க வழியா இல்லை
வல்லமை தந்த எங்கள் மாவீரரே
வாழ்வான வாழ்வு தந்து காற்றாகிப்போனீர் இங்கு
நீங்கா உங்கள் நினைவுத்தீயாய் நெஞ்சில் மூழ்குதே
(கோபுரதீபம்......)

வண்ணமாய் உங்கள் எண்ணம் நித்தமும் எம்மைச சுற்றும்
அன்பினில் ஊறும் உள்ளமா ஆறு கண்கள் நீராகிடும்
வந்தொரு வார்த்தை சொல்லும் வாஞ்சையாய் எம்மை அள்ளும்
குழியினில் வாழும் உம்முகம் தேடிநெஞ்சம் சூடாறிடும்
சாவின் பின்னும் இங்கே உங்கள் வாசம் வீசுதே....
துயிலிடம் தேடி உறவுகள் கூடி வணங்கும் தெய்வங்களே
(கோபுரதீபம்......)

பாதைகள் கல்லும் முள்ளும் பயந்தவன் காலில் குத்தும்
சாதனை செய்யும் மனிதரால் இந்த வாழ்க்கை ஒளிவீசிடும்
தடைகளை தாண்டிச் செல்லு படைகளை மோதிக் கொல்லு
தீயில் வேகம் இருந்தன அதன் எண்ணம் ஈடேறிடும்
ஈழம் என்று சொன்ன உங்கள் வார்த்தை வாழுதே
கார்த்திகை தீபம் ஏற்றிடும் போது மின்னலாய் வாருமே
(கோபுரதீபம்......)


NATURAL SILK
SILK MARK
The Ultimate Destination for Pure Silk...
ஸ்காபரோ நகரில் 10,000 சதுர அடி பரப்பு கொண்ட
பிரம்மாண்டமான இருதள காட்சியறையுடன்...
பட்டுக்களின் சங்கமம்
வரதாஸ் சில்க்
அன் கிவ்ற் வெயார்
பட்டு கூறை சேலைகள், பட்டு வேட்டி, சில்க் சேலைகள், காஞ்சிபுரம் மற்றும் மைசூரா சேலைகள்,
குருத்தா மற்றும் பஞ்சாபி சூட், அன்பளிப்புப் பொருட்கள், எவர்சில்வர் பொருட்கள் மற்றும்
சிறுவர் சிறுமியருக்கான ஆடைகள்
நிறைந்த தெரிவு, நிறைந்த மலிவு, நிறைந்த சேவை நாடுங்கள்
Varatha's Silk
& GIFTWARE
4565 Sheppard Ave., E. Scarborough, ON. M1S 1V3
TEL : 416 291 4144 / FAX : 416 291 4644

கல்லறைகள் விடை

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை
இசை : இசைப்பிரியன்
பாடியவர் : S.G சாந்தன்
இசைத்தட்டு : கல்லறை தழுவும் கானங்கள்

கல்லறைகள் விடை திறக்கும் - அங்கு
மெல்லிய காற்றது இருக்கும்
பாலினை சொரிந்திடும் நிலவு - ஒரு
பாடலை எழுதிடும் இரவு (2)
(கல்லறைகள் விடை.....)
அருகினில் விரியும் மலரினில் படியும்
பனியென உறையும் இதயம்
மாவீரர்கள் துயிலும் விடுதலை வயல்கள்
விரைவினில் அறியும் உதயம்

பூவெல்லாம் உங்களுக்கானது - இந்த
நீள்வெளி உங்களுக்கானது
மேகமே உங்களுக்கானது
மழை முத்துக்கள் உங்களுக்கானது
தேசமே உங்களுக்கானது
எங்கள் பூஜைகள் உங்களுக்கானது
வாயிருந்து உதிரும் வார்த்தைகள் - முழுதும்
மாவீரர்களே உங்களுக்கானது (2)
(கல்லறைகள் விடை.....)
கார்த்திகை உங்களுக்கானது - விடி
காலைகள் உங்களுக்கானது
போர்க்களம் உங்களுக்கானது
கோடி புண்ணியம் உங்களுக்கானது
கூத்துக்கள் உங்களுக்கானது - எந்த
கோவிலும் உங்களுக்கானது
காத்திடும் கடலும் ஆலய மணியும்
மா வீரர்களே உங்களுக்கானது (2)
(கல்லறைகள் விடை.....)

இங்கு வந்து பிறந்த

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை

பாடியவர் : S.G சாந்தன் **இசைத்தட்டு : கரும்புலிகள்**

பல்லவி

இங்கு வந்து பிறந்த பின்பே
இருந்த இடம் தெரியும் – நாளை
சென்று விடும் தேதி சொல்ல
இங்கெவரால்..... முடியும்?
வாழ்கையென்னும் பயணம் – இதை
மாற்றிடவா முடியும்?
(இங்கு வந்து....)

சரணம்

பூமியிலே.... சாகும் தேதி யாருக்கிங்கு தெரியும் – கரும்
புலிகளுக்கு மட்டும்தானே போகும் தேதி புரியும்!
சாமிகளும் வாழ்த்திவிடும் சரித்திரங்கள் இவர்கள் – தமிழ்
சந்ததியில் அழியாத சத்தியத்தின் சுவர்கள்.
(இங்கு வந்து....)

வாழ்வினிலே வசந்தகாலம் துறந்தவர்கள் சிலரே – தினம்
வாசலிலே..... இளமைராகம் மறந்தவர்கள் சிலரே
கரும்புலிகள் விரும்பியிங்கு இருப்பிழந்து போவார் – எங்கள்
கண்ணெதிரே நின்றபின்னர் உருக்குலைந்து போவார்.
(இங்கு வந்து....)

தோளிலேற்றிப் போவதற்கு நாலுபேர்கள் வேண்டும் – இந்தத்
தோள்களின்றிக் கரும்புலிகள் தீயின்வாய்கள் தீண்டும்
வாழும்காலம் நீள்வதிலே..... வந்திடுமா பெருமை? – இல்லை
வாய்கள் நூறு போற்றிப்பாடச் சாவதுதான் பெருமை.
(இங்கு வந்து....)

அச்சமின்றிக் குண்டணைத்து ஆடிப்பாடிப் போவார் – எங்கள்
அண்ணன்பெயர் சொல்லிச்சொல்லி கரும்புலிகள் சாவார்
சக்கைவண்டி தன்னிலேறிச் சரித்திரங்கள் போவார் – தமிழ்ச்
சந்ததியின் வாழ்வுக்காகத் தங்களுயிர் ஈவார்.
(இங்கு வந்து....)

எதிரிகளின் பாசறையை

பாடலாசிரியர் : புதுவை இரத்தின துரை　இசை : இசைவாணர் கண்ணன்
பாடியவர் : S.G சாந்தன்　இசைத்தட்டு : இந்த மண் எங்களின்

எதிரிகளின் பாசறையைத் தேடிப்போகின்றோம் - தமிழ்
ஈழ மண்ணைமீட்டெடுக்கஓடிப்போகிறோம்
கால்வலிக்கும் கைவலிக்கும் ஆறப்போவதில்லை - எங்கள்
கனவுநனவாகுமட்டும் சோரப்போவதில்லை
குழு: தூரமதிகமில்லைஅந்தோதெரியுதெதிரிஎல்லை
தூரமதிகமில்லைஅந்தோதெரியுதெதிரிஎல்லை
(எதிரிகளின் பாசறை.................)

அழுங்குரல்கள் கேட்கிறதேஅகதிமுகாம் போலும் - அங்கு
அழுங்குழந்தைநாளைவந்துபுலிகளுடன் சேரும்
தமிழாநிலைதொல்லை இது தலைவிதிகள் இல்லை - இங்கு
தமிழர் எல்லாம் எழுந்துவந்தால் எதிரிபடை இல்லை
குழு: தூரமதிகமில்லைஅந்தோதெரியுதெதிரிஎல்லை
தூரமதிகமில்லைஅந்தோதெரியுதெதிரிஎல்லை
(எதிரிகளின் பாசறை.................)

மண்மேடாய்கிடக்கின்றவீடுகளைப் பாரும் -இது
முன்னாளில் தமிழர்களின் குடியிருப்புஆகும்
வயல்வெளிகள் பாரும் - இது
விளையவில்லைபாரும் - இது
தமிழர் நிலம் என்பதனால் விதைக்கவில்லைப் போலும்
குழு: தூரமதிகமில்லைஅந்தோதெரியுதெதிரிஎல்லை
தூரமதிகமில்லைஅந்தோதெரியுதெதிரிஎல்லை
(எதிரிகளின் பாசறை.................)

தலைவன் சொன்னவேதம் கேட்டு
யாகஞ் செய்கின்றோம் - எங்கள்
தலைமுறைக்குள் ஈழம் காணஓடிப்போகிறோம்
அண்ணன் பெயர் சொல்லு - உடன்
அணிவகுத்துநில்லு - அந்தோ
அழிக்கவந்தஎதிரிமீதுஅனலெடுத்துச் செல்லு
குழு: அனலெடுத்துச் செல்லு.................(3)
(எதிரிகளின் பாசறை.................)

நிலவற்ற வானத்தில்

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை
பாடியவர் : S.G சாந்தன்
இசைத்தட்டு : கடலிலே காவியம் படைப்போம்

பல்லவி

நிலவற்ற வானத்தில் வெள்ளி சிரிக்கும் – அந்த
நீண்ட கடல் இருளினிலே பொங்கிக்கொதிக்கும் (2)
அலைமேலே எங்களின் பயணம் நடக்கும் (2)– வள்ளம்
அக்கரையில் சேரும் மட்டும் ஆவி துடிக்கும்
(நிலவற்ற வானத்தில்......)

சரணம்

கண்ணாளன் வருவானெண்டு இரவெல்லாம்
வாசலிலே காத்திருப்பாள் அன்பான மனைவி
காலைவரும் அவனுடலம் உருவின்றி ஐயோ
கடல் நீரில் மிதக்கின்ற செய்தி
(நிலவற்ற வானத்தில்......)

கையிலுள்ள பொருளெல்லாம் பறித்தந்தோ
மக்கள் இங்கு கதறியழ இன்னல்பல புரிந்தார் (2)
வெய்யவராம் சிங்களத்துப் பாவிகளால் (2) – நாம்
பட்ட வேதனைகள் யாரிங்கே அறிவார்
(நிலவற்ற வானத்தில்......)

ஏலேலோ ஏலேலோ
ஏலேலோ ஏலேலோ

நாகதேவன் துறை நீங்கள் வந்து ஆளவோ – நாங்கள்
நடுக்கடலில் துடிதுடித்து வெந்து மாளவோ (2)
வேகஓடம் உங்கள் கையில் இனியும் ஆகுமோ (2)– கடல்
வேங்கைவர எங்கே போனதோ

நீதியற்ற செயலைக் கேட்டு அண்ணன் இட்டான் ஆணை – உடன்
நீறுபட்டதே பகைவர் இங்கிருந்த சேணை (2)
காதலுடன் வாழ்த்திடுவோம் கடல் புலிகள் தாளை
தமிழ் ஈழமது விடிகின்ற வேளை (2)
(நிலவற்ற வானத்தில்......)

சின்னஞ் சிறு

இயற்றியவர் : புதுவை இரத்தினதுரை இசை : இசைவாணர் கண்ணன்
பாடியவர் : S.G, சாந்தன், மணிமொழி

பல்லவி

சின்னஞ் சிறு ஊரு கண்ணழுத வாறு
தேடியுமக்காக காத்திருக்கும்.
தென்னை மரத்தோப்பு உம்மை எதிர்பார்த்து
கண்ணிரண்டும் நோகப் பூத்திருக்கும் – உங்கள்
சின்னஞ் சிறு ஊரு கண்ணழுத வாறு
தேடியுமக்காக காத்திருக்கும்.

அனுபல்லவி

பகைவென்று பகைவென்று
விடைகொண்டவர் – ஆனை
இறவெங்கும் புலிவீரக் கதை சொன்னவர்
தடைவென்று மாவீரர் எனவானவர் – நாளை
தமிழீழம் வருமென்று துயில்கின்றவர்

சரணம்

உப்புத் தரவையெங்கும் உங்களின் குருதி – இந்த
உப்பளக் காற்றினிலே உங்கள் சுருதி
எப்பொழுதும் கேட்கும் உங்கள் குரலே – நீங்கள்
எழுந்தே வரவேண்டும் எங்களின் அருகே

கண்களில் நீர்வழிய உமை நினைத்தோம் – உங்கள்
கல்லறை தனில்வந்து எம்மை நனைத்தோம்
விண்ணிருந்தே இறங்கி கண்ணைத் திறப்பீர் – நீங்கள்
விழுந்த இடம்தன்னில் புன்னகை செய்வீர்








THASAN PHOTO
Guest Book
• Album Design
• Photography
• Videography
• Photobooth
• Guest Book
• Photo Printing
• Photo Framing
THASAN PHOTO
PHOTOGRAPHY & VIDEOGRAPHY
Thasan Photo
thasanfoto@gmail.com
647.299.6533


3S PRINTING SOLUTIONS
Album Design
logo design
Business Card
Flyers
Brochures
Booklets
Bookmarks
Calendars
Door Hangers
Envelopes
Invitations
Posters
Letterhead
Postcards
Posters
Banners
Sticker
Photocopies
Scan
Lamination
THE RADIATORS
3S PRINTING SOLUTIONS
3sprint2014@gmail.com
647.299.6533

நீலக்கடலே! பாடும்

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை

பாடியவர் : S.G சாந்தன் இசைத்தட்டு : கடலிலே காவியம் படைப்போம்

பல்லவி

நீலக்கடலே! பாடும் அலையே!
நெஞ்சில் சுமந்த என் தாயின் மடியே!
காலை விடிந்தது, சோகம் முடிந்தது.
காற்றில் புலிக்கொடி வானில் எழுந்தது
ஆடுங்களே இங்கு பாடுங்களே
அச்சமில்லை என்று கூறுங்களே

சரணம்

ஆழக்கடல் சோழபரம்பரை ஆளும் நிலையாச்சு
அந்நியரின் கோழைப்படை என நம்பிக்கை ஓடும்படியாச்சு
நாளைதமிழ் ஈழம்வரும் என நம்பிக்கை வந்தாச்சு
நம்ம கடற்புலிகள் வெல்லுந் தேதிகுறித்தாச்சு
(ஆடுங்களே......)

அஞ்சி அஞ்சி நாங்கள் ஒடுங்கிய காலம் முடிந்தாச்சு
ஆடும் அலைகளில் ஏறிக்கடற்புலி போகும் நிலையாச்சு
பிரபாகரன் எனும்பேருடன் தலைவன் வந்தாச்சு
சந்ததியே நிமிர்ந்ததடா எங்கும் மகிழ்வாச்சு
(ஆடுங்களே......)

செந்தமிழர் வாழும் திசையெல்லாம் போகும் நிலையாச்சு
தேசமெங்கும் பேசும்நிலையுடன் வாழும்படியாச்சு
வந்துகடல் வேங்கை பெரும் வெற்றி குவித்தாச்சு
வாழும்வரை பாடு தமிழீழம் நிமிர்ந்தாச்சு
(ஆடுங்களே......)

பாரில் தமிழன்

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை
பாடகர் : S.G சாந்தன
இசை : இசைப்பிரியன்
இசைத்தட்டு : கடலிலே காவியம் படைப்போம்

பல்லவி

பாரில் தமிழன் படும் வேதனைகள்
பனிபோல் இனிமேல் விலகும்
கடலில் புலிகள்.... தந்தானத்தன தானா
புதிதாய் வரலாறெழுதும் – கடற்
புலிகள் உலகில் உயரும்

சரணம்

எங்களின் முந்தையர் ஏறிய கடலிடை
எழுந்தது கடற்புலிப் படையடா – புதுச்
சந்ததி இங்கினி தலைகுனியாதென
சரித்திரம் எழுதிடும் விடையடா
(கடலில் புலிகள்....)

வல்லரசாயினும் வால்பிடியாயினும்
வந்திடில் வெல்லுவார் புலிகள் – தடைக்
கல்லென சிங்களம் கடலிடை வந்திடில்
கடற்பலிக் காகுவர் பலிகள்
(கடலில் புலிகள்....)

பிரபாகரனின் வழிகாட்டலிலே
உருவாகியதே கடற்புலி – இதைத்
தெரியாதெவரும் வருவாரெனிலோ
அவருக்கிங்கே புதைகுழி
(கடலில் புலிகள்....)

கல்லறைமேனியர்

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை இசை : இசைப்பிரியன்
பாடியவர் : S.G சாந்தன் இசைத்தட்டு : மண்ணுறங்கும் மாவீரம்

கல்லறைமேனியர் கண் திறப்பார்களே கார்த்திகைநாளிலே
அவர் கண்திறந்து சின்னபுன்னகைத்து வந்து கை தொழுவார்களே மேனியிலே
அன்னவரேபாடுதற்கு இந்த ஜென்மம் போதவில்லை
கல்லறையில் போடுதற்கு கோடிமலர் பூக்கவில்லை கோடிமலர் பூக்கவில்லை
(கல்லறைமேனியர்......................)

கோயில் மணிஓசையிட தேகம் மெல்லஉயிர் பெறும்
ஆறு மணிஆனஉடன் வாசல் மெல்லதிறந்திடும்
கல்லறைதெய்வங்கள் கண்ணெதிரேவந்து என்னென்னவோ கதைப்பார்கள்
அந்தபுண்ணியநேரத்தில் வண்ணங்கள் ஆயிரம் மின்னிடவே சிரிப்பார்கள்
இதுகுருதியோடும் நரம்பில் ஆடும் உணர்வின் அனுபவம்
யாரும் வெளியில் நின்றுஅறியமுடியா புதியதரிசனம்

காற்றெழுந்துவீசிடவே கண்ணெதிரே வந்தெழுவார்
காத்திருப்போர் காதுகளில் வார்த்தைஒன்றுபேசிடுவார்
தீபங்கள் ஏற்றிடும் தோழர்களைபார்த்து தாகத்துக்கும் பதில் கேட்பார்கள்
வண்ண பூவுடனேவரும் தோழியரைபார்த்து தேசத்துக்கும் வழி கேட்பார்கள்
இதுகுருதியோடும் நரம்பில் ஆடும் உணர்வின் அனுபவம்
யாரும் வெளியில் நின்று அறியமுடியாபுதிய தரிசனம்
(கல்லறைமேனியர்......................)

கல்லறையில் விளக்கோற்றி

பாடலாசிரியர் : தமிழவள்
பாடியவர் : S.G சாந்தன்
புவனா இரத்தினசிங்கம்

இசை :
இசைத்தட்டு : மாவீரர் புகழ்பாடுவோம்

பல்லவி

கல்லறையில் விளக்கோற்றிப் பணிகின்றோம் - உங்கள்
கனவுதனை எமதாக்கித் தொடர்கின்றோம்

சரணம்

மண்மீது பற்றுக்கொண்டீர் மறைவிடம் சேர்ந்தீர்
மறவர்கள் ஆகமீண்டும் பாசறை எரித்தீர்
எரித்திடும் வேளைதனில் விதையாய் விழுந்தீர்
மறந்திடுமோ உம் நினைவு அழிந்திடுமோ உம் கனவு
விரைந்திடுவோம் எதிரயவன் உயிரதுக்கு விடை கொடுப்போம்

(கல்லறையில் விளக்கோற்றிப்........)

தன்மானம் காக்கவென்று தாயினைப் பிரிந்தீர்
தாய்நாட்டை மீட்கவென்று உறவினை மறந்தீர்
விழுகின்றபோதும் எம்விடிவினை நினைத்தீர்
எரிமலையாய் நாம் எழுவோம் விடுதலைக்காய் தலைதருவோம்
விலங்கறுப்போம் சிறையுடைப்போம் விடுதலைப்பண் பாடிடுவோம்

(கல்லறையில் விளக்கோற்றிப்........)

பூவாக வாழ்ந்திங்கு புயலாய் எழுந்தீர்
புதுவரலாறெழுதி களம்தனைச் சேர்ந்தீர்
பூகம்பப் பொறியாய் எம் மனங்களில் பதிந்தீர்
கடமைதனை நாம் மறவோம் பயிற்சியினை நாம் பெறுவோம்
தாயகத்தை மீட்டு எங்கள் தலைவன் புகழ் பாடிநிற்போம்

(கல்லறையில் விளக்கோற்றிப்........)

உதயன்

உலகத்தமிழர்

தமிழர் செந்தாமரை
EST 1994
LEADING TAMIL NEWSPAPER

tamil one

cmr Diversity FM 101.3

Lankasri Ninaivukal

ANALAI EXPRESS

KATHIROLI RADIO கதிரொளி வானொலி

Vanna Thamil Radio வண்ணத் தமிழ் வானொலி

தமிழ் மிரர் Tamil Mirror

THANGATHEEPAM தங்கத்தீபம்

ekuruvi.com

தளிர்

Seithy.com செய்தி

TTR TORONTO TAMIL RADIO கீதவாணி

GTA VIDEO ENTERTAINMENT Video & Photography

tvi Tamil Vision Int

HD

CTR கனேடிய தமிழ் வானொலி CANADIAN TAMIL RADIO

ஈழநாடு

east FM 102.7

ATN ASIAN TELEVISION NETWORK

itr

eet TV

கண்ணுக்குள்ளே வைத்து

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை　　இசை : இசைப்பிரியன்
பாடியவர் : S.G சாந்தன்　　இசைத்தட்டு : தணல்

கார்த்திகை மாதம் பூத்திடும் போதில் கார்த்திகை பூக்களும் பூத்திடும் கண்ணில்
நீர்த்துளி கோர்க்கும் நிலமது வேர்க்கும் நெஞ்சில் நெருப்பினை மூட்டிடும் ......

கண்ணுக்குள்ளே வைத்து காத்திடும் வீரரை மண்ணுக்குள்ளே விதைத்தேம் - அந்த
புண்ணியர் நெஞ்சினிலே பூத்ததோர் கனவினை எண்ணத்திலே வளர்த்தோம் (2)
கல்லறை வாழ்த்திடும் நல்லவரே உம்மை கைதொழ வந்துள்ளோம் கண்திறப்பீர்
மெல்லிய புன்னகை மேகங்களே உங்கள் சொந்தங்கள் வந்துள்ளோம் வாய்திறப்பீர்
(கண்ணுக்குள்ளே வைத்து..........)
ஆயிரம் ஆயிரம் பேர்களை விதைத்தோம் கல்லறை வரிசைகள் நீள்கிறதே - அந்த
வரிசையில் சுடர்கள் ஏற்றிடும் பொழுதில் நெஞ்சினில் நெருப்பது மூழ்கிறதே
வானத்தின் திருநாள் கார்த்திகையே
மாவீரத்தின் பெருநாள் கார்த்திகையே
மானத்தின் திருநாள் எங்கள் மாதவன் நாளதும் கார்த்திகையே
கார்த்திகை மாதம் கறுப்பு இந்த கார்த்திகை மாதம் நெருப்பு (2)
(கண்ணுக்குள்ளே வைத்து..........)(2)
வீசிடும் காற்றதும் சூரியத் தீயதும் உங்களின் கல்லறையில் பணிகிறதே - எங்கள்
தாயகம் முழுவதும் தாங்கிய தோள்களை பார்த்திட விழிகளும் ஏங்கிறதே
விதைப்பதும் முளைப்பதும் கார்த்திகையில்
உங்கள் விழிகளும் மலர்வதும் கார்த்திகையில்
நெருப்புக்கள் எரிப்பதும் காரத்திகையில்
எங்கள் நெஞ்சுகள் சிலிர்ப்பதும் கார்த்திகையில்
கார்த்திகை மாதம் கறுப்பு இந்தக் கார்த்திகை மாதம் நெருப்பு (2)
.(கண்ணுக்குள்ளே வைத்து..........)(2)
கண்ணுக்குள்ளே வைத்து காத்திடும் வீரரை மண்ணுக்குள்ளே விதைத்தோம் - அந்த
புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர் கனவினை எண்ணத்திலே வளர்த்தோம்
கல்லறை வாழ்ந்திடும் நல்லவரே உம்மை கைதொழ வந்துள்ளோம் கண்திறப்பீர்
மெல்லிய புன்னகை மேகங்களே உங்கள் சொந்தங்கள் வந்துள்ளோம் வாய்திறப்பீர்
(கண்ணுக்குள்ளே வைத்து..........)(2)

ஈடுவைத்து ஈடுவைத்து

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை
இசை : இசைவாணர் கண்ணன்
பாடியவர் : S.G சாந்தன்
ஜெயா சுகுமார்
இசைத்தட்டு : ஆனையிறவு

பல்லவி

ஈடுவைத்து ஈடுவைத்து நந்தலாலா - தமிழ்
ஈழம்தரப் போகிறாவே நந்தலாலா
ஆடும்வரை ஆடிவிட்டா நந்தலாலா - இப்போ
ஆனையிற வெங்களிடம் நந்தலாலா

அனுபல்லவி

எந்தமாதிரி அட அந்தமாதிரி - தமிழ்
ஈழமெங்கள் கண்ணெதிரே வந்த மாதிரி
சொந்த ஊரிலேறி நாங்கள் சென்ற மாதிரி - ஏதோ
தேவதைகள் வந்து வரம் தந்தமாதிரி
விந்தை மாதிரி - வாசம்
வீசும் மாதிரி - அட
சந்தனத்தைப் பூசிக்கொண்டு நின்ற மாதிரி

சரணம்

ஊருக்குள்ள போகப்போறோம் நந்தலாலா - இப்போ
உள்ளதையும் தந்து போறோ நந்தலாலா
மாமனையே நம்பி நம்பி நந்தலாலா - இப்போ
மாரடிச்சுக் கொள்ளுறாவே நந்தலாலா

அம்பகாமம் வந்து போனார் நந்தலாலா - இப்போ
ஆட்டிலறி தந்து போனார் நந்தலாலா
அம்மையாரே தந்து போவார் நந்தலாலா - இப்போ
அம்பாறையும் பன்குளமும் நந்தலாலா

இந்தியாவுக் கோடிப்போனார் நந்தலாலா - இப்போ
இஸ்ரவேலுக் கோடுறாவாம் நந்தலாலா
எங்கு ஒடிப் போயுமென்ன நந்தலாலா - எங்கள்
தம்பிதானே வெல்லப் போறார் நந்தலாலா

இனிவரும் இனிவரும்

இயற்றியவர் : புதுவை இரத்தினதுரை
இசை : இசைவாணர் கண்ணன்
பாடியவர் : S.G, சாந்தன்
இசைதட்டு : ஆனைமிறவு

பல்லவி

இனிவரும் இனிவரும் காலங்கள் – அவை
எங்களின் காலங்கள்
குனிவதும் பணிவதும் இனியில்லை – தமிழ்க்
குடியினுக் கழிவில்லை
இருளே இனிமேல் விலகிடு – விடி
பொழுதே மடியினில் உலவிடு
உலகே எமக்கெனக் குரல் கொடு – எங்கள்
உறவுகள் திரும்பிட வழிவிடு

அனுபல்லவி

உயிர் ஒரு முறைதான் போகும் போகும்
உரிமைக்காக போகட்டும்
உடல் ஒரு முறைதான் எரியும் எரியும்
உரிமைக்காக எரியட்டும்

சரணம்

சாயும் சுகமே சுகமென்று – நீ
பாயிற் சரிதல் முறையன்று
தாயின் விடிவே எமதென்று – வா
தமிழீழம்தான் முடிவென்று

இதுநாள் வரையும் அழுதோம் அழுதோம்
இனியெம் தலைகள் நிமிரட்டும்
நிலமீதினிலே எழுவோம் எழுவோம்
பகைவர் உயிர்கள் கருகட்டும்

தமிழர் விழிகள் நெருப்பானால் – எங்கள்
தலைவன் கைகள் பலமாகும்
தலைவன் கைகள் பலமானால் – எந்தத்
தடையும் விரைவில் அழிவாகும்

இளமைக் காரர் முழுதும்
இனிமேல் புலியாய் இருக்கட்டும்
இருந்தால் ஈழம் மலரும் மலரும்
எமக்கும் சிறகுகள் முளைக்கட்டும்



நந்தா உணவகம்
NANTHA RESTAURANT
NANTHA CATERS
SRI LANKAN & INDIAN FOOD
Catering, Bakery & Take Out
BEST CATERS IN TOWN
சிறந்த முறையில் தயாரித்த
அறுசுவை உணவுகளை,
அனைத்துவித வைபவங்களுக்கும்
பெற்றுக்கொள்ளுங்கள்
இப்பொழுது 3 இடங்களில்
சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்
வாழை இலை சாப்பாடு!
Brimle & Steeles - 4915 Steeles Ave.E | Warden & Finch - 3268 Finch Ave.E
Kippling & Steeles - 5010 Steeles Ave. |
Call 416 NANTHA1
416 626 8421

Joe's Buffet Palace

Fine Indian Cuisine

Joe.P

(416) 850-3179

361 Yonge St.
Toronto, ON M5B 1S1
admin@joesbuffetpalace.com
www.joesbuffetpalace.com

Store Hours | Mon - Sun 11:00 am - 11:00 pm

Lunch Buffet \ Dinner Buffet \ Menu Card
Takeout \ Delivery \ Catering (Small or Big events)

களங்காண விரைகின்ற

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை

பாடியவர் : S.G சாந்தன் இசைத்தட்டு : நெருப்பு நிலவுகள்

பல்லவி

களங்காண விரைகின்ற வேங்கைகள் நாங்கள்
தமிழீழம் உருவாகும் பாருங்கள் - இங்கு
புதுப்பாதை தனை எங்கள் தலைவனே தந்தான்
புலியாகி எழுவோமே வாருங்கள்

அனுபல்லவி

இன்னுமா விழிகளில் ஈரம் - இது
எழுந்து போராடிடும் நேரம்
(களங்காண ....)


சரணம்

தேசங்கள் எங்கும் விடுதலை தேடி
போராடும் நேரமிது - நம்
தாகங்கள் தீரும் தாயகம் சேரும்
தலைவனின் காலமிது
(இன்னுமா விழிகளில்....)
(களங்காண ....)

வாழ்வினில் சா வரும் என்றுமே அஞ்சி
வழியினில் நாங்கள் தளர்வோமா - தமிழ்
தாயினை மாற்றான் அழித்திடும் வேளையில்
தமிழர் நாம் சும்மா இருப்போமா
(இன்னுமா விழிகளில்....)
(களங்காண ....)

தலைவன் வழியிலே தடைகளை வென்றுமே
சரித்திரம் படைத்திங்கு நிற்போம் - இந்த
உலகினில் வாழும் பெண்களுக்கெல்லாம்
புதுவழி காட்டியே நிற்போம்
(இன்னுமா விழிகளில்....)
(களங்காண ....)



REGINOS PIZZA
Morningside
790 Military Trail
Scarborough ON - M1E 4P7
REGINOS
PIZZA
416.284.3003


UCMAS Increases:
Memory, Speed, Accuracy, Creativity, Focus, Concentration, Confidence and more
Canadian Best UCMAS Franchise Award Winner 2013, 2014 and 2015
To Be a Winner, Be With a Winner
UCMAS
Curriculum Classes
- Math
- English
- Science
- French
- Physics
- Adv Functions
- Calculus
- Curriculum based teaching
- Exam Preparation
- Homework Help
- Foundation Building
- University Preparation
JK to Grade 12
Weekday Evening & Weekend Classes
TUSGU
Educational Services
BELLAMY
1100 Bellamy Road North, 2nd Floor
Bellamy & Ellesmere
FINCH
3850 Finch Avenue East, Unit 308
Finch & Kennedy
MORNINGSIDE NEW LOCATION
1265 Morningside Ave, Unit 201
Morningside & Sheppard
Call for Morningside New Location Promotional Deals!
Bellamy - 416 439 8037
Finch - 416 299 1900
Morningside - 416 287 3131
Cell: 416 575 9742
Web: http://tusgu.org
Email: info@tusgu.org

An Ontario Secondary Private School

Delta Academy Inc.

BSID # 667561



Classes For

Grades 9, 10, 11 & 12

[illegible]

We improve the knowledge of students who are behind in their regular school.

We guide students to be successful in University.

We invite students who have difficulties in understanding / improving but with true interest to perform well.

Contact

416.751.2011

deltaacademyinc@hotmail.com

1160 Birchmount Road, Unit 1B, Scarborough ON M1P 2B8

An Ontario Secondary Private School Registered Under the Ministry of Education

Delta Academy Inc.

Offers the Following OSSD Credit Courses

Our goal is not the quantity of students but quality of education. We ensure that the students are trained to work independently and be prepared to the next grade level with the help of our highly qualified and experienced teachers.

Classes begins on
February 23, July 3, September 24 2012.
Register with us early as the space is limited.
All courses are 110 hours.
Course fee is $500 (Including registration)

Contact

416.751.2011

deltaacademyinc@hotmail.com
1160 Birchmount Road, Unit 1B,
Scarborough ON M1P 2B8

Grade 10

English	ENG2D
Principle of mathematics	MPM2D
Science	SNC2D

Grade 11

English	ENG3U
Functions	MCR3U
Biology	SBI3U
Chemistry	SCH3U
Physics	SPH3U
Accounting	BAT3U
Economics	CIA3U

Grade12

English	ENG4U
Advanced Functions	MHF4U
Calculus and Vectors	MCB4U
Data Management	MDM4U
Biology	SBI4U
Chemistry	SCH4U
Physics	SPH4U
Accounting	BAT4M
Economics	CIA4U

ART COURSES

Grade 9

Vocal	
Violin	
Veena	AMU10
Piano Keyboard	
Dance	ATI101
Miruthangam	AMP10

Grade 10

Vocal	
Violin	
Veena	AMU20
Piano Keyboard	
Dance	ATI201
Miruthangam	AMP20

Grade 11


Vocal	
Violin	
Veena	AMU3M
Piano Keyboard	
Dance	ATI3M1
Miruthangam	AMP3M

Grade 12

Vocal	
Violin	
Veena	AMU4M
Piano Keyboard	
Dance	ATI4M1
Miruthangam	AMP4M


Manufactures Custom Made Blinds and Shutters
NOW ON SPECIAL SALE
VINYL & WOOD SHUTTERS
DRAPERY
SHADES
VIENNA
2" WOOD BLINDS
& MUCH MORE
LIFE TIME WARRANTY
- Free Estimates and Installation
- Guaranteed Low Price
- Special on California Shutters
Tel: 416-886-6436 JEYABALAN (JEY)
VISIT OUR SHOWROOM TO VIEW MORE PRODUCTS!
60 Innovation Dr., Vaughan, ON L4H 0T2


காப்புறுதி உங்கள் நண்பன்
நம்பிக்கை உத்தரவாதம்
உங்கள் காப்புறுதிகளை உங்கள் வசதிக்கேற்ப
உங்களுக்கு விரும்பிய காப்புறுதி நிறுவனத்தில்
பெற்றுக்கொள்ள அழையுங்கள்
"ஊரோடு உறவாடும் உங்கள் நண்பன்"
Jay Nadarajah
Insurance Broker
416-558-2551
Canada Life
RBC Insurance
INDUSTRIAL ALLIANCE
Email: nadarajahj@gmail.com


TKS
Beauty Salon & Video
416.546.6767
1145 Morningside Ave Scarborough, ON, M1B 0A7

முல்லை மண் எங்களின்

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை இசை :
பாடியவர் : S.G சாந்தன் இசைத்தட்டு : முல்லைப் போர்

முல்லை மண் எங்களின் வசமாச்சு – ஈழம்
முற்றிலும் வெல்வது திடமாச்சு (2)
தொல்லைகள் நீங்கிடும் மகிழ்வாச்சு (2)
உயர் தலைவனின் வழியிலே நிமிர்ந்தாச்சு
(முல்லை மண்......)

விலகிடு விலகிடு விரைவாய் – பகையே
விலகிட வில்லையேல் அழிவாய் (2)
(முல்லை மண்......)

நேற்றிருந்த ஊர்பறித்தாய் நீபுரிந்த கோரம்
எம்தெருநீளம் நாம்நடந்தோம் விழிகளிலே ஈரம் (2)
காற்றிப்போ எம்பக்கம் திரும்பியது காலம் (2)
கரிகாலன் சேனை வென்றதிங்கே கொட்டுங்கடா மேளம் (2)
(முல்லை மண்......)

புலிகள் பலம் இழந்ததென்று சொன்னதெந்த வாய்கள்
பிரபாகரனின் மூச்சினிலே அழிந்ததவர் பேய்கள் (2)
அழகொளிரும் முல்லை எங்கள் பூமி என்றேபொங்கு
மீண்டும் வந்ததெங்கள் கைகளிலே ஊதுங்கடா சங்கு (2)
(முல்லை மண்......)
ஓயாத அலைகள் என்று அண்ணன் இட்ட பேரு
பகைவன் ரணவிருவும் வான்கலமும் இங்கு சுக்குநூறு (2)
உயிர் அழிக்க வந்த படை உயிர் அழிந்த கோலம் (2)
பெரும் வெற்றி எங்கள் வாசலிலே தட்டுங்கடா தாளம் (2)
(முல்லை மண்......)


AATEK
HEATING & COOLING
Heating & Cooling
• Gas Furnaces
• Humidifiers
• Furnace Cleaning
• Air Conditioners
• Hot Water Heaters
• Stove & Dryer Hookups
• GAS LiNE INSTALLATiON
FINANCING, PAYMENT OPTIONS & RENTALS
This is the time for Furnaces Cleaning
100% FREE
Traveling charge in GTA Area
Call Elango Thiyagarajah
416-414-2280
Licensed Technician
For all your Repairs & Installation Needs
Email : aatekcanada@gmail.com
21 Steppingstone Trial, Toronto, ON. M1X 2B4


No one Plans to Fail,
They just Fail to Plan
கல்வி சேமிப்புத் திட்டம் (RESP) ஒன்றில் முதலிடுவதன் மூலம் உங்கள் பணத்துடன், அரசாங்க பணத்தையும் இனாமாகப் பெற்று இன்றே சிறுக சிறுக சேமிக்கத் தொடங்குங்கள்
• We have 3 plans to choose
• No commitment
• You can contribute any time you want.
உங்கள் RESP சம்பந்தமான அனைத்துக் கேள்விகளுக்கும் RESP முகவர் ஆக விரும்பினாலும் அழையுங்கள்
வில்வமோகன் 416 301 9144
Give RESPECT to your child's career...

இந்தமண் எங்களின் சொந்தமண்

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை
இசை : இசைவாணர் கண்ணன்
பாடியவர் : S.G சாந்தன்
இசைத்தட்டு : இந்த மண் எங்களின் சொந்த மண்

இந்தமண் எங்களின் சொந்தமண் (2)
இதன் எல்லைகள் மீறியார் வந்தவன்
இந்தமண் எங்களின் சொந்தமண்
இதன் எல்லைகள் மீறியார் வந்தவன்
நீர் வளம் உண்டு நில வளம் உண்டு
நிம்மதி ஒன்றுதான் இல்லை
இந்தமண் எங்களின் சொந்தமண்

நிலைகள் தளர்ந்து தலைகள் குனிந்து நின்றது போதும் தமிழா
உந்தன் கலைகள் அழிந்து கவலைமிகுந்து கண்டது போதும் தமிழா
வரிப்புலிகள் எழுந்து புயலைக்கடந்து போர்க்களம் ஆடுது தமிழா
இன்னும் உயிரைநினைந்து உடலைசுமந்து ஓடவா போகிறாய் தமிழா
(இந்தமண் எங்களின் சொந்தமண்)

சாவாய் இல்லை ஒரு வாழ்வா எனப்பெரும் சமரே எழுந்தது தமிழா
உடன் வாவா புலியுடன் சேர்சேர் எனும்குரல் வரையை பிளக்குது தமிழா
நீ ஆகா அழைக்குது போபோ எனஒருமகனை அனுப்பிடு தமிழா
நீ பூவாய் இலைப்பெரும் புயலாய் எழுந்துமே புறப்பட்டு வந்திடு தமிழா
(இந்தமண் எங்களின் சொந்தமண்)


NEED A MORTGAGE
நம்பிக்கை மற்றும் உத்தரவாதத்துடன் உங்கள் தேவைகளிற்கு ஏற்ப
ஆலோசனைகளுடன் கூடிய சேவையைப் பெற என்னை நாடுங்கள்
MORTGAGE ALLIANCE
Access Inc.
Purchase/ Refinance
Renewal / Switch
Equity line of credit
Debt- finance consulting
2nd & 3rd Mortgages
KEN
SIVANENTHIRAN
MORTGAGE AGENT
905.621.1019
Independently Owned and Operated Lic. #11404
209-8130 Sheppard Ave East,Toronto, ON. M1B 3W3
ksivanenthiran@mortgagealliance.com


sageprestige
IN KINGSTON
2 Year Rental Guarantee
2 Year Free Property Management
Fully Furnished
Walking distance to Queen's University
Own for less than Toronto and rent for higher
Long-Term Hotel Living for Students that you can own, Cash Flow Real Estate
Own from
$1,000/month
To know more about the CONDOMINIUM please contact
Remax Hall of Fame Award Achiever
Thiru Nagarajah
salesperson
Dir: 416 697 1555
RE/MAX
RE/MAX REALTRON REALTY INC.
Brokerage
Independently Owned & Operated

ஆழக்கடல் எங்கும்

பாடலாசிரியர் : புதுவை இரத்தினதுரை இசை :
பாடியவர் : S.G சாந்தன் இசைத்தட்டு : நெய்தல்

ஆழக்கடல் எங்கும் சோழ மகராஜன் ஆட்சி புரிந்தானே அன்று

ஆழக்கடல் எங்கும் சோழ மகராஜன் ஆட்சி புரிந்தானே அன்று (2)
தமிழீழக் கடல் எங்கும் எங்கள் கரிகாலன் ஏறி நடக்கின்றான் இன்று (2)
காலை விடிந்ததென்று பாடு சங்க காலம் திரும்பியது ஆடு (2)
ஆழக்கடல் எங்கும் சோழ மகராஜன் ஆட்சி புரிந்தானே அன்று


எட்டு திசை யாவும் தொட்டு பெரும் சோழன் ஏறிக்கடல் வென்றதுண்டு
அவன் விட்ட இடம் எங்கும் வென்று வருகின்றார் வேங்கைக் கடல் வீரர் இன்று
(எட்டு திசை யாவும....)
(காலை விடிந்ததென்று...)

எங்கள் கடல் மீதில் எதிரி வருகின்ற இன்னல் இனிமேலும் இல்லை
புலி பொங்கி எழுந்திட்ட தங்கத் தமிழீழ பூமி தனிலேது தொல்லை
(எங்கள் கடல் மீதில்...)
(காலை விடிந்ததென்று...)

கடலில் என்றாலும் தரையில் என்றாலும் காவல் இருக்கின்ற தம்பி
எதிர்ப் படைகள் வரும்போது பாயும் புலிவீரன் பகையை முடிப்பானே பொங்கி
(கடலில் என்றாலும்.....)
(காலை விடிந்ததென்று.....)

வலிமை தருமெங்கள் தலைவன் வழிதன்னில் வங்கக்கடல் நின்று பாடும்
கடல்ப் புலிகள் எழுகின்ற போர்கள் தனில் வெற்றி பெற்றுத் தமிழீழம் ஆடும்
(வலிமை தருமெங்கள்......)
(காலை விடிந்ததென்று.....)

ஆழக்கடல் எங்கும் சோழ மகராஜன் ஆட்சி புரிந்தானே அன்று
தமிழீழக் கடல் எங்கும் எங்கள் கரிகாலன் ஏறி நடக்கின்றான் இன்று
தமிழீழக் கடல் எங்கும் எங்கள் கரிகாலன் ஏறி நடக்கின்றான் இன்று
ஆழக்கடல் எங்கும் சோழ மகராஜன் ஆட்சி புரிந்தானே அன்று


HDV LED WALL
Stage Program
Community Events
Annual Programs and Shows
We have Microh Panels
(3.8mm,4.8mm,5.5mm,7mm)
Mobile video panels
Theepan
416.558.1579
hdv@live.ca


Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தமிழ்த் தொலைக்காட்சி நிலையம்!
35க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
1000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்
Download the LycaTV app FREE from
App Store
amazon
LG Smart
தொடர்புகளுக்கு
DEALER INQUIRY
647 262 8404
SALE
647 931 1745
WEB
www.LycaTV.tv